REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✦ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 19உ வியாழன் (2—6—55) ★ ★ வெளியூர்: வைகாசி 20உ வெள்ளி (3—6—55) [இதழ் 301

ஒலி வேகத்தை மிஞ்சும் ராக்கெட் சாதனங்கள்!

ஒலியைவிட வேகமாகச் செல்லக்கூடிய 'ராக்கெட்' சாதனம் ஒன்றை பிரெஞ்சு விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருப்பதாகத் தெரிகிறது. இது மணிக்கு 1,605 மைல் வேகத்தில் செல்கிறதாம்.

சாதாரண விமான பெட்ரோலையே இதற்கு உபயோகிக்கலாமெனவும், இது மிகவும் மலிவானதென்றும் கூறப்படுகிறது.

இதுபற்றிப் பல வருடங்களாக ஆராய்ச்சி செய்துகொண்டிருந்த நிபுணர்கள், இந்தச் சாதனத்தை, போர் விமானங்களுக்கும் உபயோகிக்க முடியுமென்று நம்புவதாகவும் கூறப்படுகிறது.

இலங்கையில் தமிழ் மாநிலக் கிளர்ச்சி?

தமிழர் உரிமை பாதுகாக்கப்பட - தனியாகத்தான் பிரிய வேண்டுமா?

தமிழரசுக் கட்சித் தலைவர் வன்னிய சிங்கம் கேள்வி

கொழும்பு, மே 30—

இப்போதிருக்கிற முழு அதிகாரம் பெற்ற மத்திய ஆட்சியே நீடித்திருக்கவேண்டும் என்று இலங்கை சர்க்கார் கருதுமானால், சூழ்நிலைகளின் நிர்ப்பந்தத்தால், தமிழர்கள், சிங்கள ராஜ்யத்திலிருந்து, தனியாகவே பிரிந்து வாழ்வது ஏன் கூடாது என்று சிந்திக்க வேண்டியவர்களாவர்,"

—என்று, இலங்கை மக்கள் சபை உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருமான சி. வன்னிய சிங்கம் என்பவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது:—

"தமிழர்களின் பிரச்சினைக்கு மூன்று பரிகாரங்கள் உள்ளன:—

(1) இப்போதுள்ள அரசாங்கத்தின்கீழ் இருந்து, தங்களின் மொழி, கலை, மதம், தனியாகி இயங்கும் தன்மை ஆகியவற்றை இழந்து, பெருவாரியான சிங்களவர்களால் ஆட்கொள்ளப்படுவது.

(2) ஒரு பெடரல் யூனியன் சர்க்கார் அமைத்து அதில் சிங்களவரைப் போலவே எல்லா உரிமைகளையும் சுதந்திரங்களையும் பெற்று, சிங்களவருடன் அமைதியாக வாழ்வது.

(3) இலங்கை ஆட்சியிலிருந்து முழுவதுமாகப் பிரிந்து தனியாகவோ அல்லது இந்தியக் குடியரசுடன் கூட்டாகவோ வாழ்வது."

என்பவைதான் அந்த மூன்று பரிகாரங்களும்.

"இதில் மூன்றாவது பரிகாரத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தனியாகப் பிரிவது, தமிழர்களுக்கோ சிங்களவருக்கோ உகந்தது அல்ல. தனியாகப் பிரிந்தால், இரண்டு நாடுகளுக்கு மிடையே தவிர்க்கமுடியாத மோதல்கள் ஏற்படக்கூடும்.

"சிங்களவர்கள், தமிழர்களின் உரிமைகளை அங்கீகரிக்க மறுத்து, அப்படித் தனித்து வாழவேண்டிய சூழ்நிலைக்குத் தமிழர்களை துரத்தவில்லை யென்றால், தமிழர்கள் ஏன் ஒரு, 'பெடரல் சர்க்கார்' அமைப்பதின் மூலம் தங்கள் பிரச்சினைக்குப் பரிகாரம் தேட முயற்சிக்கக் கூடாது?"

இலங்கை இந்தியர் பிரச்னை

'பொருளாதாரத் தொடர்புடையது!'

கொத்தலாவலை வியாக்கியானம்

கொழும்பு, ஜூன் 1—

"இந்தியருக்கு எதிராக விரோதம் எதுவும் கிடையாது; இந்தியா-இலங்கை பிரச்சினை கடினமானதல்ல.

"இலங்கை இந்தியருக்கு குடி உரிமை வழங்கும் விஷயம், பொருளாதாரப்பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டது; பெருகிக் கொண்டேயிருக்கும் மக்கள் தொகைக்கு வேலை கண்டுபிடிப்பது சிரமமாகிறது,"

என்று, இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை, இந்தியத் தூதுவர் சக்ரவர்த்திக்கு இந்திய வர்த்தக சபை தந்த விருந்து உபசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இவைமட்டுமல்ல அவையும்தான்!

கொன்பாவூர், மே 31—

'நிலம் மாத்திரமின்றி தொழிற்சாலைகளும் பொதுச் சொத்தாக வேண்டும் என்பது நமது கொள்கை' என்று பூதான இயக்க லட்சியம் குறித்து விளக்குகையில் விநோபாபாவே குறிப்பிட்டதாகத் தெரியவருகிறது.

திருமணம் கோயிலில் நடத்துவதற்கு எதிர்ப்பு!

'உள்ளடிப் பாகுபாடுகளை - விட்டொழியுங்கள்!'

சிவசண்முகம் தரும் தகவல்

"அருந்ததியர், தேவேந்திர குலவேளாளர், ஆதித்திராவிடர் என்ற உள்ளடிப் பிரிவுகளை ஒழித்துக்கட்டி, சரிசமம் என்ற ஒரே பெயரில் ஒற்றுமைபட வேண்டும்."

—இவ்வாறு கோவை மாவட்ட அருந்ததியர் முன்னேற்ற சங்கத்தைத் துவக்கிவைத்த ஜே. சிவசண்முகம் அவர்கள் கூறியுள்ளார்.

அவர் மேலும் தமது உரையில் கூறியதாவது:—

"தங்களுடைய நோக்கை மாற்றிக்கொண்டு, செய்யப்படுகிற சமுதாய சீர்திருத்தச் சட்டங்களுக்கு மதிப்பளித்து நடக்க சாதாரண மக்கள் முன்வந்தால் அல்லாது, அதிகமான சட்டங்களை நிறைவேற்றிவிடுவதால் மட்டுமே தேவைப்படும் சீர்திருத்தத்தைச் செய்துவிட முடியாது. வந்தவாசியை அடுத்துள்ள கிராமம் ஒன்றில் சென்ற வாரத்தில் பி. ஏ. பட்டதாரியான ஒரு அரிசன வாலிபருக்குத் திருமணம் நடைபெற்றது. அத் திருமணத்தை, அங்குள்ள சிறிய கோயிலில் நடத்த வேண்டுமென மணமகன் விரும்பினார். ஆனால் கோயில் நிர்வாகிகளோ, அதற்கு இடமளிக்க மறுத்துவிட்டனர். கோயில் நுழைவுச் சட்டம் நடைமுறையில் இருந்தும்கூட, போலீஸ் உதவியுடன்தான் மேற்படி திருமணத்தைக் கோயிலில் நடத்த முடிந்தது. இதைக் கண்டிக்கும்முகத்தான், அக்கிராமத்திலுள்ள வியாபாரிகள் அனைவரும் கடையடைப்பு செய்தனர். இக்கல்யாணத்திற்கு நானும், வி. பாஷ்ய அய்யங்காரும் அழைப்பின் மீது சென்றிருந்தோம்."

ப. வேலாயுதம் — ஜெயலெட்சுமி

மன்னார்குடியில் திருமணம்

மன்னார்குடியில், மணமகள் இல்லத்தில், தோழர் ப. வேலாயுதம்—தோழியர் விஜயலெட்சுமி திருமணம், திரு. ஜி. பாலகிருஷ்ண முதலியார் அவர்கள் தலைமையில், **1-6-55** காலை 8 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர்கள் கே. ஏ. மதியழகன், என் வி. நடராசன், க. அன்பழகன், இராம-அரங்கண்ணல், ஆர். சௌரிராஜன், ஆர். செழியன், எஸ்.எஸ்.பி.லிங்கம், எஸ் வி. லிங்கம், ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., அ. பொன்னம்பலனார், நாராயணசாமி, கே. ஆர். ஜி. பால் அடைக்கலம், ஜி. பராங்குசம், டி. வி. முத்துகிருஷ்ணன், மற்றும் உள்ளூர், வெளியூர் தோழர்களும், பிரமுகர்களும், உறவினர்களும், பெருந் திரளாக வந்திருந்தார்கள். தலைவர் அவர்கள் முன்னுரை கூறினார்கள். மணமக்கள் மலர் மாலைகள் சூட்டிக்கொண்டு, மணமகன் தாலியும் கட்டினார்.

தி. மு. கழக முன்னாள் பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை, தோழர்கள் ஞானசிகாமணி, கே. எஸ். எஸ். ராஜன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தினார்கள்.

மணமக்கட்கு வாழ்த்து மடல்களும், பரிசுகளும் அன்பர்கள் வழங்கினார்கள்.

இறுதியில், மணமகன் எல்லோருக்கும் நன்றி கூறினார். சந்தனம், மலர், இனிப்பு, பழங்கள் வழங்கினார்கள். விருந்துகளும் சிறப்பாக நடைபெற்றது.

தலைவர் முடிவுரையுடன் திருமண நிகழ்ச்சி இனிது முடிவுற்றது.

'சித்தமருத்துவம் சிறப்புடையதாகும்'

'விலை உயர்ந்த மருந்துகளை நமது மக்களால் பெற முடியாது'

பட்டம் பெற்ற நாட்டு மருத்துவர்களுக்கு பி. டி. இராஜன் அறிவுரை

மதுரை, மே 29—

"நாட்டு மருத்துவம் என்றாலே அது ஏழைகளுக்குத்தான் சொந்தமானது என்ற நினைப்பும், அதுகுறித்து அலட்சிய எண்ணமும் ஒருகாலத்தில் இருந்தன. துரதிருஷ்டவசமாக தெளிவாக எழுதப்பட்ட நூற்கள் இல்லாமையால், நாட்டு மருத்துவத்தைக் குறித்து ஆராய்வதற்கு இடமில்லாமல் இருக்கிறது.

"சித்த மருத்துவம் மிக உயர்ந்த முறையாகும். இருந்தாலும், அம்முறையை மேற்கொண்டு தொழில் புரிந்துவரும் மருத்துவர்களுக்கு, அவர்களுக்கு இருந்துத் தீரவேண்டிய அளவு நன்மதிப்பு, பொதுமக்களிடம் இல்லாமல் இருந்துவருவது வருந்தக்கூடியதாகும்.

"அறுவை மருத்துவத்தைப் பொறுத்தவரையில், அதற்குரித்தான கருவிகளும், செயல் முறைப் பயிற்சியும், நமது நாட்டு மருத்துவத்தில் இடம் பெற்றிருக்கவில்லை. மருந்துகளைப் பொறுத்தவரையில் சித்த மருத்துவம், யூனானி, ஆயுர்வேதம் ஆகிய முறைகள் சிறந்ததும், நம்பிக்கைக்குரியதாகவும் உள்ளன."

—மதுரையில் நடைபெற்ற எல். ஐ. எம். பட்டம் பெற்ற நாட்டு மருத்துவர்களின் மாநாட்டைத் திறந்துவைத்தபொழுது, பி. டி. இராஜன் எம்.எல்.ஏ., அவர்கள் மேற்கண்டவாறு பேசியுள்ளார்கள்.

அவர் மேலும் தொடர்ந்து பேசும்பொழுது:—

"ஆங்கில மருத்துவர்களால் தீர்க்க முடியாத வியாதி எனக் கைவிடப்பட்ட வியாதிகளுக்கு, பரிகாரம் கண்டுபிடித்த நாட்டு மருத்துவர்களுக்கு ஒப்புதலும் பாராட்டுதலும் மறுக்கப்படுவது வருந்தக்கூடியதேயாகும். நாட்டு மருத்துவ முறைகளில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டும். உயிரும் உடலும் ஒன்றி இருப்பதற்கான அளவே ஊதியம் பெற்று, மருத்துவர்களும் ஆசிரியர்களும், மக்களுக்கு ஊழியம் செய்து வந்தனர். எந்தவிதத் தொழிலில் ஈடுபடுகிறவர்களாக இருந்தபோதிலும் ஒவ்வொருவரும், புதுமையைக் கண்டுபிடிப்பதிலும், முன்னோர்களால் கையாளப்பட்டு மறைந்துகிடக்கும் உண்மைகளை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கும், தங்கள் அறிவையும், ஆற்றலையும் பயன்படுத்த வேண்டும். மக்கள் தங்களுடைய உழைப்பை நம்பும் வகையில், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தொழில்களைச் செய்ய முன்வர வேண்டும்.

"நம்முடைய நாடு ஒரு ஏழை நாடு; விலையுயர்ந்த மருந்துகளுக்குச் செலவிடுவது நம்மவர்களால் முடியாது. தங்களுடைய கல்வித் திறத்தையும், அதனால் ஏற்படும் நற்பயனையும் மக்களுக்கு வழங்க நாட்டு மருத்துவர்கள் உறுதி கொள்ளவேண்டும்.

"மக்கள் உடல் நலத்தில்தான் மற்ற முன்னேற்றம் அடங்கி இருக்கிறது. எனவே, அதை வளர்ப்பதில் நாட்டு மருத்துவர்களுக்கு அதிகப் பொறுப்பும் பங்கும் இருக்கிறது.

"மேல் நாடுகளில் பொதுநலக் காப்பைக் குறித்து மக்கள் நன்கு அறிந்திருப்பவர்களாக உள்ளனர். அங்கு மக்களுக்கு உடல் நலக் காப்புக்கு உத்திரவாதம் இருக்கிறது. அதன் மூலம் இனாமாகவாவது அல்லது குறைந்த செலவிலாவது மருத்துவ வசதிபெற அவர்களால் முடிகிறது.

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 2—6—'55 வியாழன்

'இந்து'வின் கோணல் புத்தி!

தீண்டாமை எந்த உருவில் அனுசரிக்கப்பட்ட போதிலும், அது ஒரு தண்டிக்கத் தக்கக் குற்றமாகக் கொள்ளப்படும் என்று, அண்மையில் டில்லி மக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டம், ஜூன் முதல் தேதி முதல் நடைமுறைக்கு வந்திருக்கிறது.

எட்டிநில்—அருகில் வராதே எனக் கூறப்பட்டபோதிலும், அவ்வாறு கூறினவர் தண்டிக்கப்படுவார் என்பது புதிய சட்டத்தின் உள்ளடக்கம்.

புதிய சட்டத்தின் தன்மையை உணர்த்த—பொதுமக்களுக்கு விளக்கி வைக்க, சென்னை அரசாங்க அரிசன நல்வாழ்வுத்துறைஒருசுவரொட்டிப் படம் வெளியிட்டுள்ளது.

அதில் ஒருவரைப் பார்த்து மற்றொருவர் 'எட்டி நில்—அருகில் வராதே' எனக் கடிந்து கொள்வது போலவும், அவ்வாறு கூறினவர் சிறையில் தள்ளப்பட்டு இருப்பது போலவும் ஓவியம் வரையப்பட்டிருக்கிறது.

சுவரொட்டி ஓவியத்தில், கடிந்துகொள்ளும் கனவானுக்கு, மார்பில் பூணூலும், தலை உச்சியில் குடுமியும் வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஓவிய உருவம் ஒரு பார்ப்பனனைக் குறிப்பிடுகிறது என்பது 'இந்து' இதழின் வாதம்!

வகுப்பு வாதப் பன்னுடை இதழின் ஒரு பக்கமாக இருக்கக்கூடும் அந்தச் சுவரொட்டி என்று 'இந்து' எழுதுவதின் மூலம், தனது பெருங்குணத்தையும், பரம்பரை சமத்துவ சமரச சமதர்ம பண்பாட்டையும் தரணிக்கு அறிவித்துக் கொள்ளுகிறது!

இதுபோன்ற விரோதமான பிரசாரத்தைக் கண்டிப்பதைப் போல் வேறு பெரும் கண்டனம் இருக்கமுடியாது என்றும், பொதுமக்கள் பணத்தை விரயமாக்கியுள்ள செயல் வேறு இருக்கமுடியாது என்றும், 'இந்து' சீறிவிழுந்து, சீரான செலவின் மேன்மையைக் காக்கவும், சொந்த குலத்தைத் தற்காத்துக் கொள்ளவும் முன்வந்திருக்கிறது.

'இந்து'வின் துணைத் தலையங்கத்தை ஒரு முன்மாதிரியாகக்கொண்டு, மேற்படி அரசாங்கச் சுவரொட்டியைத் தாக்கிப் பேசவும், அரசாங்கத்தை அச்சுறுத்தவும், பார்ப்பன மக்கள் பரணி பாடுகின்றனர்.

'இந்து' இதழில் மூன்று கடிதங்கள்—ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன; இடமின்மையால் அவ்வளவையும் வெளியிட முடியவில்லை என்ற குறிப்புடன்—பிரசுரிக்கப்பட்டுள்ளன!

திரிசிரபுரத்தில் பார்ப்பனர்கள் ஒன்று கூடி உள்ளனர். அரசாங்கத்தை மிரட்டியுள்ளனர். நேரடி நடவடிக்கை—மறியல்—துக்க நாள் — வரி மறுப்பு— டெல்லிக்குக் காவடி இத்தியாதி எதிர்ப்புகளை அரசாங்கத்திற்கு விரோதமாகச் செய்யப்போவதாக, பார்ப்பனத்தமர்கள் தீர்மானித்துள்ளனர்!

உச்சிக் குடுமி, பூணூல் இந்த இரண்டையும் தாங்கியுள்ள ஒரு திருமேனியை, வைதிகம் — பழமை வெறியைக் காட்டும் அடையாளமாகக் கருதி, ஓவியம் வரைந்தது தான், சென்னை அரசாங்கம் செய்துள்ள மகத்தான காரியம்!

இதற்கு, பார்ப்பனச் சேரியில் புயல் கிளம்பி இருக்கிறது!

'மிடி சாபம்' என்கின்றனர் பார்ப்பனச் சமத்துவ பெருங்குணத் திருமேனிகள்!

'வரி கொடோம்! மறியல் செய்வோம்! டெல்லிக்குக் காவடி தூக்குவோம்!' என்கின்றது. அந்தச் சனாதனச் செம்மல்கள்!

தீண்டாமையை வலியுறுத்தி வருவது, கட்டிக் காத்து வருவது, வைதிகம்! தீண்டாமை ஒழிப்பை எதிர்ப்பது, குறுக்கே நிற்பது சனாதனம்!

வைதிகம் — சனாதனத்தைத் திறம்பட சுட்டிக் காட்டுவது பூணூலும்—உச்சிக் குடுமியும்!

இந்த அவலட்சணம், பார்ப்பனர்களுக்கு மட்டுமே உரித்தானது எனத் திட்டவட்டமாகக் கூறுவதற்கில்லை.

பார்ப்பனர்களைப் போன்றே மேற்படி அவலட்சண உருவில் வேறு குலத்தவரும் இருக்கத்தான் இருக்கின்றனர்.

எனவே உச்சிக் குடுமியும் பூணூலும் பார்ப்பனர்களை மட்டுமே சுட்டிக் காட்டக்கூடியவையாகும் எனக் கொள்வதற்கு, நடைமுறையில் இடமில்லை.

அரசாங்கச் சுவரொட்டியில் உச்சிக்குடுமியும் பூணூலும் தீட்டியுள்ள உருவத்தின்கீழ் 'பார்ப்பனன்' என எழுதி இருக்கவில்லை. அப்படி எழுதி இருந்தாலாவது, 'இந்து' அரசாங்கத்தைக் காய்வதில் பொருள் இருக்க முடியும்!

சுவரொட்டியில் பூணூலும் - உச்சிக்குடுமியும் கொண்ட ஒரு மனித உருவத்தை ஓவியமாகத் தீட்டி இருப்பதை, தம்மவர் எனக்கொண்டு 'இந்து' அரசாங்கத்தைத் தூற்றக் கிளம்பி இருப்பது, எள்ளிநகையாடத் தக்கதாகும்.

உச்சிக் குடுமி வைத்துக் கொள்ளுகிறவர்களும், பூணூல் தரித்துக் கொள்ளுகிறவர்களும் பார்ப்பனர்களில் மட்டுந்தான் உள்ளனர் எனக்கூற 'இந்து' இதழுக்குத் துணிவிருக்காது.

உச்சிக்குடுமியும் பூணூலும் பார்ப்பனர்களுக்கு மட்டுமே உரித்தான புறச் சின்னங்கள் என 'இந்து' நம்பிக்கொண்டிருக்கிறது என்ற உண்மை, 'இந்து'வின் எதிர்ப்பின் மூலம் உறுதி செய்யப்படுகிறது!

'இந்து' நம்புவதுபோல், அரசாங்கம் சுவரொட்டியை ஒருக்காலும் வெளியிட்டிருக்காது.

அந்தகையத் துணிவு சென்னை அரசாங்கத்திற்குக் கிடையவும் கிடையாது.

அரசாங்க அமைச்சர்கள் விரும்பினாலும், நிலையான நிர்வாக அமைப்பு அதற்கு இடமளிக்காது!

அந்த நிர்வாக அமைப்பில் உள்ளப் பெரும பகுதியினர், 'இந்து'வின் திருக்கல்யாண குணமும் — குலநலமும் கொண்டவர்கள்தானே? அவர்களா இழைப்பர், மறந்தும் சொந்தக் குலத்திற்குத் தீமை?

'இந்து' வீண் வம்பை விலை கொடுத்து வாங்க முனைகிறது! மறைந்துவரும் வகுப்பு விரோதத்தை, மீண்டும் வளர்க்க 'இந்து' முயலுகிறது!

'இந்து'வின் கோணல் புத்தியை என்ன செய்வது? அக்குடிப் பிறந்த இளைஞர்கள் தான், அதற்குத் தக்க பாடம் கற்பிக்க வேண்டும்.

கைத்தறி நெசவாளர் பிரச்சினை

பாகிஸ்தானிலும் உருவாகிறதாம்!

பாகிஸ்தானில் உள்ள நெசவாலைகள், வரும்ஆண்டில்தங்களின் இலட்சியஉற்பத்திஎல்லையைஅடையும்போது, அங்கு, 25 இலட்சம் பேருக்கு வாழ்வு தரும் கைத்தறி நெசவுத் தொழில் கஷ்டப்படும். ஆலையுடன் போட்டியிட முடியாது தவிர்க்க நேரிடும். ஏறத்தாழ இந்தியா, பாகிஸ்தான் நாடுகளின் கைத்தறி பிரச்சினை ஒரே தன்மையுடையதாகையால், ஆலைத் துணிக்கு உபரி வரி விதித்தும், சில ரகங்களைக் கைத்தறிக்கென ஒதுக்கியும், இந்தியாவைப் போலவே, பாகிஸ்தான் அரசாங்கமும், கைத்தறி நெசவுக்கு பாதுகாப்புத் தரக்கூடும் என்று, பாகிஸ்தான் கைத்தறி நெசவு புள்ளி விவர ஆராய்ச்சிக் குழுத் தலைவரான ஹுசைன் இமாம் என்பவர் குறிப்பிட்டிருக்கிறார்.

நிசாமின் சொத்துக்கள்

விற்பனைக்கு வருகின்றன!

ஐதராபாத், மே 31—

அவுரங்காபாத் மாவட்டத்தில் உள்ள தனது சொத்துக்களை ஐதராபாத் நிசாம் விற்றுவிட முடிவு செய்திருக்கிறதாகத் தெரிகிறது.

ஐதராபாத் மாநிலத்தினைத் துண்டாடவேண்டுமென, மாநில புனரமைப்புக் குழு, தீர்ப்பளிக்குமானால், மராத்தி மொழி பேசும் பகுதிகளுடன், ஐதராபாத்தில் உள்ள மராத்தி பேசும் பகுதிகளும் இணைந்துவிடும். அப்போது காராத்வாடா எனும் மராத்தி மொழி பேசும் பகுதியில் உள்ள தன் சொத்துக்களும் அங்கு சென்றுவிடக்கூடும் என்றும், எனவே, தான் விற்று விடுவது நல்லதெனவும் அவருக்கு ஆலோசனை கூறப்பட்டிருக்கிறதாம்.

1,40,000 தொழிலாளர்கள் ஈடுபட்ட வேலைநிறுத்தம் தவிர்க்கப்பட்டது!

டெட்ராய்ட், மே. 30—

சுமார் 1,40,000 தொழிலாளர்கள் மேற்கொள்ளவிருந்த வேலைநிறுத்தம், தொழிலாளர், முதலாளி பிரதிநிதிகளின் பேச்சுவார்த்தைகளினால் தவிர்க்கப்பட்டிருக்கிறது

'போர்டு' மோட்டார் தொழிற்சாலை நிர்வாகிகளும், அதன் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளும், ஏற்படவிருந்த வேலைநிறுத்தத்தைத் தவிர்த்திருக்கின்றனர்.

சங்கத்தினர், 'உறுதியான வருடவருமானம்' என்ற தங்கள் கோரிக்கையை மாற்றியமைத்துக்கொண்டனர்; கம்பெனியாரும் தங்கள் காலித் திட்டத்தினை மாற்றியமைத்திருக்கின்றனர்.

பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்டிருந்தால் புதன்கிழமை இரவு முதல் வேலைநிறுத்தம் செய்வதெனச் சங்கத்தினர் அறிவித்திருந்தனர்.

ஆந்திர காங்கிரஸ் தலைவர் தேர்தலில் தகராறு?

கோபாலரும் சஞ்சீவியாரும் விலகி நிற்பராம்!

கர்னூல், மே 31—

ஆந்திர பிரதேச காங்கிரஸ் தலைவர் தேர்தலில், பலர் எதிர்பார்த்தபடியே சிக்கலும், கோஷ்டிச் சண்டையும் உருவாகியுள்ளதாகத் தெரியவருகிறது.

வரும் ஜூன் 4-ந் தேதியன்று நடைபெறவிருக்கும் தலைவர் தேர்தலில் முதன் மந்திரி கோபால ரெட்டியும், துணை முதன் மந்திரி சஞ்சீவி ரெட்டியும் கலந்துகொள்ளப் போவதில்லை என்றும் தெரியவருகிறது

அவர்கள் இருவருமாகக் கூட்டு அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளனர். அதில், தலைவர் தேர்தலுக்குப் போட்டி வேண்டாமென்றும், ஒருமனதாக தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும், கோரியுள்ளனர். மேலும், இப்போதுள்ள பிரதேச காங்கிரஸ் துணைத் தலைவர் காளா வெங்கட்ராவையே தேர்தலை நடத்தி வைக்குமாறும், தாங்கள், தேர்தல் தினத்தன்று விஜயவாடாவில் இருக்கப்போவதில்லை என்றும் தெரிவித்திருக்கின்றனர்!

அகமதாபாத் பத்திரிகைகளிடை போட்டா போட்டி!

விலை நிர்ணயிக்க மத்திய அரசாங்கத்திடம் முறையீடு!

அகமதாபாத், மே 31—

உள்ளூரிலிருந்து வெளிவரும் தினப் பத்திரிகைகளிடையே, பத்திரிகை விலைப் போட்டா போட்டி ஏற்பட்டிருப்பதை, தலையிட்டு தவிர்க்குமாறு, மத்திய அரசாங்கத்தினை உள்ளூர் தினசரி ஒன்று கோரியுள்ளதாம்.

சில நாள் முன், ஒரு புதிய தினசரி, தனது 8 பக்கங்கள் கொண்ட இதழின் விலையை ஒரு அணவாக நிர்ணயித்து வெளியிட ஆரம்பித்தது. இதனால் ஏற்கனவே வெளி வந்துகொண்டிருந்த வேறு இரு 8 பக்க தினசரிகள், இரண்டணா விலையிலிருந்து ஒரு அணா விலைக்கு இறங்கிவர நேர்ந்தது 4 பக்க தினசரி, ஒரு அணா விலையிலிருந்து அரையணாவாகக் குறைந்தது.

'குஜராத் சமாசார்' என்ற ஒரு 8 பக்க பத்திரிகை, இது பற்றி டாக்டர் கேஸ்கருக்கு அனுப்பியுள்ள தந்தியில், அவர் உடனே இந்த போட்டாபோட்டி விஷயத்தில் தலையிட்டு, இத்தனை பக்கம் கொண்ட பத்திரிகைக்கு இவ்வளவுதான் விலையிருக்க வேண்டுமென நிர்ணயிக்க வேண்டும் என்றும், குறைந்த விலைக்கு போட்டியினால் பத்திரிகை விற்க வேண்டிவந்தால், அகமதாபாத் பத்திரிகைத் தொழில் அழிந்துபடும் என்றும் கூறியுள்ளதாகத் தெரிகிறது.

அகில இந்திய ஆரம்ப ஆசிரியர் சங்கம்

பொதுச்செயலாளர் தேர்வில் தகராறு

பூரி, மே 30—

அகில-இந்திய ஆரம்ப ஆசிரியர் சங்க மாநாடு, மூன்று நாட்கள் நடைபெற்று முடிவுற்றபோது, சங்கத்திற்கான புது நிர்வாகிகள் தேர்தல் முடிவுறவில்லை.

வாஞ்சர்சாரி என்பவரை திரும்பவும் சங்கத்தின் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுத்ததை, பம்பாய், ஒரிசா பிரதிநிதிகள் ஆட்சேபித்து வேறு சில பிரதிநிதிகளுடன், மாநாட்டுப் பந்தலைவிட்டு வெளியேறினர் என்று தெரிகிறது.

அக்காளுக்கு ஆசி!

திருச்சூரில் நடந்த உபதேர்தலில் காங்கிரஸ் அபேட்சகரின் வாக்குப் பதிவு பெட்டி ஒன்றில் கீழ்க்கண்ட கடிதம் இருந்ததாகக் கூறப்படுகிறது:—

'அன்புள்ள அக்காளுக்கு,

அக்காளுடைய வெற்றியை நான ஆத்மார்த்தமாக விரும்புகிறேன். அக்காளுக்கு சர்வ வெற்றியும் கிடைப்பதாக...'

இந்தியா முழுமைக்கும்

ஒரே மாதிரியான பஞ்சாங்கம்

காலண்டர் சீர்திருத்தக் குழுவின் சிபாரிசுகள் ஏற்றுக்கொள்ளப்படுமானால், ஒரேமாதிரியான காலண்டர் முறை இந்தியா முழுமைக்குமாக வரும் மார்ச் 21-ந் தேதி முதல் அமுல் செய்யப்படலாமெனத் தெரிகிறது.

இந்தப் புதிய முறை, ஏற்கனவேயுள்ள சுமார் 30 வெவ்வேறு காலண்டர் முறைகளை ஒழிக்குமாம்.

நாட்டின் புத்தாண்டுத் தொடக்க நாளாக மார்ச் 22-ந் தேதியை, காலண்டர் சீர்திருத்தக் குழு சிபாரிசு செய்திருக்கிறது. வரும் ஆண்டு 'லீப்' வருடமாகையால் மார்ச் 21-ந் தேதியன்று புத்தாண்டு துவங்குமாம்.

ஐந்தாண்டுகளுக்காக குழு, 1954—55 முதல் 1958—59 - வரைக்கும் காலண்டர் தயாரித்திருக்கிறதாம்.

பஸ் பிரயாணம்—விசித்திர அனுபவம்!

சென்னை காசினோ சினிமா தியேட்டருக்கு எதிரில் உள்ள 16-ம் எண் வழி பஸ் நிலையத்தில் பல பிரயாணிகள் காத்திருந்தனர். பஸ் வர வெகுநேரத்திற்கு முன்பே 'கண்டக்டர்' டிக்கட்டுகளை பிரயாணிகளுக்குத் தந்துவிட்டாராம். பஸ் வந்தது. பிரயாணிகள் ஏறினர் ஆனால் டிக்கட் வாங்கியவர்களில் எட்டு பிரயாணிகள் வேறு ஒரு பஸ் வரவே அதில் பிரயாணம் செய்யக் கருதி தங்கிவிட்டனர். அடுத்த பஸ் வந்தது. அதில் ஏறினர். பஸ் இன்ஸ்பெக்டர், ஒரு பஸ் டிக்கட்டை வைத்துக்கொண்டு வேறு ஒரு பஸ்ஸில் பிரயாணம் செய்யக்கூடாதெனக் கூறினாராம். பிரயாணிகள் நிர்ப்பந்தமாக பஸ்ஸில் உட்கார்ந்துகொண்டனர். அவர்கள் வேறு டிக்கட் வாங்கவும் மறுத்துவிட்டனர். மூன்று மணி நேரம் பஸ் தாமதிக்கப்பட்டது. கண்டக்டர், போலீஸ் நிலையத்திற்குச் சென்று புகார் செய்திருக்கிறார். எட்டு பேர்களில் ஒருவரான ஒரு கௌரவ நீதிபதி விஷயத்தை பஸ் போக்குவரத்து அதிகாரிக்கு டெலிபோன் மூலம் தெரிவித்தார். போக்குவரத்து நிர்வாகி வந்து, அவர் சொன்னதின் பேரிலேயே கண்டக்டர், போலீஸ் நிலையத்தில் புகார் செய்தாராம்.

விஷயத்தை, போக்குவரத்து இலாக்கா மந்திரிக்கு டாக்டர் சாமுவேல் என்ற அந்த கௌரவ நீதிபதி டெலிபோன் மூலம் தெரிவித்ததில், நீதிபதி தன்னை வந்து மறுநாள் சந்திக்குமாறு, அவர் கூறியிருக்கிறார் என்று தெரியவருகிறது!

உருளைக்கிழங்கு-சில குறிப்புகள்

★

உருளைக் கிழங்கு நீண்டகாலம் கெடாமல் இருக்கும்படிச் செய்ய வெயிலில் காயவைக்கும் வழக்கம் 2,000 ஆண்டுகளாக இருந்து வருகிறது. இதனால் அவைகளின் நிறமும், ருசியும் சிறிதுமாற்றமடைவது சகஜம். உருளைக்கிழங்கின் ருசியும்,நிறமும் சிறிதும் கெடாமல் இருக்க இப்பொழுது புது முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க விவசாய இலாகாவைச் சேர்ந்தவையும் அந்நாட்டின் பல்வேறு பாகங்களில் இருப்பவையுமான ஆராய்ச்சி நிலயங்களின் சேவை மூலம், இம்முறைகள் தெரியவந்துள்ளன.

ஓர் ஆராய்ச்சிசாலையில் உருளைக் கிழங்குத் தூள் தயாரிக்கப்படும் முறை கண்டு பிடித்திருக்கிறார்கள். உருளைக்கிழங்குகளின் தோலை நீக்கி, வேகவைத்து பீப்பாய்களில் நிறைத்து வைக்கிறார்கள். இப்பீப்பாய்கள் இடைவிடாமல் சுழன்றுகொண்டே இருக்கும் அவற்றுள் நீராவியைச் செலுத்தி உருளைக்கிழங்குக் கூழைக் காய வைக்கிறார்கள் காய்ந்த கூழ் ஒரே கனமுள்ள துணிபோல வெளியே எடுக்கப்படுகிறது. இதனை நொறுக்கித் தூளாக்கி அடைத்து வைக்கிறார்கள்.

இன்னொரு ஆராய்ச்சி நிலயத்தில், உருளைக்கிழங்கைப் பொடியாக்கும் பெரும் பீப்பாய் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால் உருளைக்கிழங்குப் பொடியை நிறமும்,மணமும் குன்றாமல் நீண்ட காலம் வைத்துக்கொள்ள முடியும். இந்தப் பீப்பாய் மூலம் ஒரு மணி நேரத்தில் 1,000 பவுண்டு உருளைக் கிழங்கைப் பொடிபண்ண முடியும். காலை உணவு சாப்பிடும் பொழுதும், குழம்பாகவும் சாப்பிடுவதற்கு இவ்வாராய்ச்சிச் சாலையில் உருளைக் கிழங்குத் துண்டுகள் தயாரிக்கப்படுகின்றன. கொதிக்கும் தண்ணீரில் இத்துண்டுகளைப் போட்டு உடனடியாக அவைகளை காயவைத்து அதே நேரத்தில் அவைகளைச் சூடாக்கி இத்துண்டுகள் தயாரிக்கப்படுகின்றன இத்துண்டுகளில் புதும் நீராவி அவைகளைப் பெரிதாக்குகின்றது. இத்துண்டுகளுடன் வெண்ணெய், வெங்காயம், சர்க்கரை, உப்பு முதலியவை சேர்த்துக்கொண்டால் ருசியாக இருக்கும். வேக வைக்கும் தண்ணீரில்தான் இவை சேர்க்கப்படும்.

உருளைக் கிழங்குத் துண்டுகளிலிருந்து நேர்த்தியான மற்றொரு வகை வறுவல் போன்ற பொருளையும் தயாரித்திருக்கிறார்கள். இதனை ருசி கெடாமல் நீண்ட காலம் வைத்துக் கொள்ளவும் தூர தேசங்களுக்கு அனுப்பவும் முடியும்.

இராணுவம், காப்பி ஓட்டல்கள், பெரிய விருந்து முதலியவற்றில் இவை அதிகம் பயன்படும்.

இதுவரை நடந்திருப்பவை ஆராய்ச்சிகளே. இனி இதற்குத் தேவையான இயந்திரங்களைத் தொழிற்சாலைகள் தயார் செய்து விற்க ஆரம்பித்தவுடன் உருளைக் கிழங்குத் துண்டுகள் நாடு நெடுகப் பிரபலமாகிவிடும். இவை இன்னும் சிறிது காலத்தில் பல வெளி நாடுகளிலும் கிடைக்கலாம்.

மகனைக் காப்பாற்ற...

தாயின் வீரப் போர்!

பிராசாவில்லே,
(ஆப்பிரிக்கா) மே 30—

ஒரு பிரம்மாண்டமான கொரில்லாவுக்கும், (மனிதக் குரங்கு) ஒரு மானிடப் பெண்ணுக்கும் இங்கு சிறிது நேரம் சண்டை நடந்தது. தனது 7 வயது மகனைக் காப்பாற்றும் பொருட்டு அப்பெண் அதனுடன் சண்டையிட்டபோதிலும், தனது ஒரு வயதுக் குழந்தையைப் பலிகொடுக்க வேண்டியதாகிவிட்டது.

கானக மார்க்கமாக ஒரு பெண் தன்னுடைய இடுப்பில் சிறு குழந்தையைத் தூக்கிக் கொண்டு, தன் மற்றொரு மகனை நடத்திக் கூட்டிச் சென்றாள். அப்பொழுது திடீரென்று ஒரு மனிதக் குரங்கு தோன்றி, தாக்க ஆரம்பித்தது ஆனால், தாய் சிறிதுகூட அஞ்சாமல் அந்தக் குரங்குடன் சண்டையிட்டு அதனிடம் சிக்கிய தனது ஏழு வயது மகனைக் காப்பாற்றினாள். ஆனால், குரங்கோ அந்தப் பையனை விட்டுவிட்டு, சிறு குழந்தையைத் தூக்கிக் கொண்டு கானகத்தினுள் ஓடிவிட்டது. இத்தகவலைக் கேள்விப்பட்டு, கிராமத்தினர், கானகத்தினுள் ஓடிச்சென்று தேட ஆரம்பித்தனர். ஆனால், ஒரு புதருக்கருகில் பிரஸ்தாப சிறு குழந்தையின் உடல் சின்னாபின்னமாக்கப்பட்டுக் கிடந்ததைத்தான் அவர்கள் காண முடிந்தது.

காட்டு பூனையை பிடிக்க!

போலீஸ் படை திரண்டது!

ராஜ்கோட், மே. 31—

அசந்து தூங்குவோரின் சதையைக் கடித்துத் தின்று வாழும் காட்டுப் பூனை ஒன்றைப் பிடிக்க ஆயுதந் தாங்கிய போலீஸ் படையே இங்கு ஈடுபட்டிருக்கிறது.

ராஜ்கோட்டுக்கு அருகாமையிலிருக்கும் ஒரு கிராமத்தில் இக்காட்டுப் பூனை வாசம் செய்கிறது இது இரவு நேரங்களில் வீட்டுக் கூரைகளில் ஒளிந்துகொண்டிருக்குமாம். அனைவரும் தூங்கிவிட்டார்கள் என்று அறிந்ததும் மெதுவாக இறங்கி வந்து அவர்களின் மாமிசத்தைக் கடித்து இழுத்து ருசி பார்த்துவிட்டு ஓடிவிடுமாம் இதனால், அந்த கிராமமே பீதி அடைந்திருக்கின்றது. மக்கள் இரவு நேரங்களில் தூங்காமல் அவதிப்படுகின்றனர்.

இதனால் கடிக்கப்பட்டவர்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஒரு வயோதிக மாதின் கன்னத்தைப் பிடித்துக் கடித்து அச்சதையை இப்பூனை தின்றுவிட்டது. வேறொரு கிழவியின் கண் ஒன்றும் பூனையால் பிடுங்கப்பட்டு விட்டது. பூனைக் கடியினால் ஒரு குழந்தைகூட இறந்துவிட்டது!

பெரிய திருடனைப்போல இப்பூனை சென்ற 15 தினங்களாக போலீசார் கண்களிலிருந்து தப்பி வருகிறது. போலீசாரும் துப்பாக்கியும் கையுமாக தேடும் படலத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ரஸ்தாவில் இரவில் சுற்றித் திரியும் நாய்களையும் போலீசார் சுட்டுக் கொல்வதில் ஈடுபட்டுள்ளனர். இதில் ஏதாவது ஒன்று பிரஸ்தாப காட்டுப் பூனையாக இருக்கக்கூடுமென்ற நம்பிக்கையில் இவ்வாறு செய்யப்படுகிறது ஆனால் இதுவும் பயன்படாததால் வேட்டை நாய்களின் உதவியை நாட திட்டமிடப்பட்டுள்ளது.

கான்ஸ்டேபிளைத் தாக்கிய ஐ. ஏ. எஸ். அதிகாரி!

சஸ்பெண்ட்' செய்யப்பட்டார்!

சவந்த்வாரா, மே 31—

'ஹெட்-கான்ஸ்டேபிள்' ஒருவரைத் தாக்கி அடித்ததாகவும், தங்கும் விடுதியிலும் இதே போன்ற செயலில் ஈடுபட்டதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ஐ. ஏ. எஸ். அதிகாரி ஒருவரை மத்திய பிரதேச மாநில சர்க்கார் 'சஸ்பெண்டு' செய்திருக்கின்றனர். இவ்வாறு, இந்திய சர்க்கார் சர்வீசிலிருக்கும் ஒரு அதிகாரியை மாநில சர்க்கார் 'சஸ்பெண்டு' செய்வது இதுவே முதல் தடவையாகும்.

ஜபல்பூரில் 'டெப்டி கமிஷன'ராக இருக்கும் இவரின் பெயர் வி. எஸ். டாம்போ. இவர் பேரில் பல குற்றங்கள் சாட்டப்பட்டுள்ளன. இவைகளைப் பற்றி விசாரிக்க இரண்டு பேரடங்கிய 'டிரிபியூனல்' ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

ஆச்சாரியாருக்கு நேரு தரும் சூடு!

புதுடில்லி, மே. 31—

"அணுகுண்டு, நீர்வளிக் குண்டு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்காவிடமிருந்து இந்தியா எவ்வித உதவியும் பெறக்கூடாது," என்று ஆச்சாரியார் கூறியிருந்தார் அல்லவா? அதுபற்றிக் குறிப்பிடுகையில் பண்டிடத நேரு கூறியதாவது :—

"ஆச்சாரியாரின் கொள்கை மிக உயர்ந்த தார்மீக நிலை பற்றியது. அவரது நிலையை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

"ஆனால், ஆச்சாரியார் கூறுவது போன்றில்லாது, அணுகுண்டு உற்பத்தியையும், அமெரிக்க உதவியையும், தனித் தனியாகப் பரிசிலனை செய்யவேண்டும் என்பது என் கருத்து.

"அரசியல் விளைவுகளடங்கிய ஒரு அரசியல் பிரச்சினையையும். ஒரு பெரிய தார்மீகப் பிரச்சினையையும் ஆச்சாரியார் ஒன்றாக இணைத்திருக்கிறார். ஆச்சாரியார் போன்ற தனிப்பட்டவர்கள், அவ்வாறு இரண்டையும் ஒன்றாக இணைக்க முடியும். ஆனால் ஒரு சர்க்கார் அவ்வாறு இரு பிரச்சினைகளையும் ஒன்றாக இணைப்பது மிகக் கடினம்."

"ஆச்சாரியார் மத்திய அரசாங்க மந்திரியாயிருந்த போது, அமெரிக்க உதவி பற்றி ஆலோசனை கூறியதுண்டா," என்று ஒரு நிருபர் கேட்டபோது, "ஆச்சாயார், மத்திய அரசாங்க மந்திரியாயிருந்த காலத்தில் நீர்வளிக்குண்டு கண்டுபிடிக்கப்படவே இல்லை" என்று நேரு பண்டிதர் பதிலளித்திருக்கிறார்.

'கிராக்கி!'

சென்னை, மே 31—

சென்னை சர்க்கார் கதர் உற்பத்தி நிலயங்களில் தயாராகும் கதருக்கு பம்பாயில் நல்ல 'கிராக்கி' ஏற்பட்டிருக்கிறதாம்.

பம்பாய் கதர் கிராமத் தொழில் பொருள்கள் 'எம்போரிய'த்தைச் சேர்ந்த என்.கே. மேத்தா சென்னை வந்திருக்கிறார். அவர் 3 லட்சம் ரூபாய்க்கு கதர் வாங்குவார்.

திரு. மேத்தா இங்கு கிராம அபிவிருத்தி இலாகா டைரக்டர் ஜி வெங்கடாசலபதியுடன் சமுதாய நலத் திட்டம், தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் பற்றிப் பேசினார்.

★

உத்தேசம்!

தேசீய சேவை விஸ்தரிப்பு திட்டப் பிரதேசங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஆயிரம் சர்க்கா வீதம் அதிகரித்து கதர் உற்பத்தியை அதிகரிக்க சென்னை சர்க்கார் உத்தேசித்திருக்கின்றனர். மொத்தம் 40 பிரதேசங்கள் இங்கிருக்கின்றன.

அரசாங்க வசம்!

குண்டூர், மே 31—

ஆந்திர சர்க்கார், மாநிலத்தில் உள்ள ஏழு தனிப்பட்ட மின்சார வினியோக கார்ப்பரேஷன்களையும் 1956 மார்ச் திங்களுக்குள் அரசாங்க வசமாக்கிவிடுவர் என்று தெரிகிறது.

குழந்தை விற்பனையில்

'திடீர்' விலையேற்றம்!

கொல்லம், மே 31—

பிறந்து இருபது தினங்களான ஒரு குழந்தையின் விலை நாலரையணாவிலிருந்து ஒரே நாளில் திடீரென ஐந்து ரூபாயாக உயர்ந்த சம்பவமொன்று கொல்லத்தின் சமீபம் நடைபெற்றிருக்கிறது.

வாடி என்ற இடத்தைச் சார்ந்த ஒரு கிறிஸ்தவப் பெண் கள்ள உறவில் பெற்றதாகக் கூறப்படும் இருபது தினங்களான தனது குழந்தையை இரவிபுரத்திலுள்ள ஒரு தொழிற்சாலையின் சமீபம் விலை பேசிக்கொண்டிருந்ததாகவும், மூன்று குழந்தைகள் பிறந்தும் தற்போது சந்தானமின்றி தவித்து வரும் ஒருவர் 'சுளுவில்' கிடைக்கிறதேயென்ற கருத்தில் நாலரை அணா விலை பேசி அந்தக் குழந்தையை வாங்கிச் சென்றாராம்.

ஆனால், அடுத்த நாள் வேறொருவர் அந்தக் குழந்தைக்கு ஐந்து ரூபாய் தருவதாகக் கூறியதால் அந்தப் பெண் 'மார்கட்'டில் திடீரென ஏற்பட்ட கிராக்கியை தெரிவித்து, விலைக்கு வாங்கியவரிடமிருந்து குழந்தையை திரும்பப் பெற்று, கூடிய விலைக்கே கொடுத்துவிட்டாளாம்.

★★

விழுப்புரம் ஜோதி தியேட்டரில்

புரட்சி நடிகர் **எம். ஜி. இராமச்சந்திரன்** மற்றும்
M. G. R. நாடக மன்றத்தினர் நடிக்கும் இரண்டு நாடகங்கள்

4—6—55 சனி
இரவு 10½ மணிக்கு

அண்ணா
அவர்கள் தலைமையில்

'ஆசை நினைவு'
(புதிய நாடகம்)

★

5—6—55 ஞாயிறு
இரவு 10½ மணிக்கு

'இன்பக் கனவு'

கட்டணம்: ரூ: 5, 3, 2, 1; பெண்கள் [தரை] அணா 12

—அமைப்பாளர்கள்: டி. வி. வேதமூர்த்தி, எம். எஸ். பாபு

★★

உதவியின் நோக்கம்!

அமெரிக்கா விளக்கம்

வாஷிங்டன், மே 31—

"சுதந்திரத்தைப் பொது நோக்கமாகக் கொண்டு ஒன்று சேர்ந்துள்ள சுதந்திர நாடுகளின் மக்களுடைய பந்தோபஸ்தை பலப்படுத்துவதுதான், அமெரிக்கா வெளிநாடுகளுக்கு அளிக்கும் உதவிகளின் நோக்கமாகும்" என வெளிநாட்டு நடவடிக்கைகள் நிர்வாக ஸ்தாபனத்தின் அறிக்கை குறிப்பிடுகின்றது.

கூட்டுத் தற்காப்பு முறை, பரஸ்பர நன்மையளிக்கும் பொருளாதார ஒத்துழைப்பு முதலியவைகள் மூலம் சமாதான முன்னேற்றமும், பந்தோபஸ்தும் ஏற்பட வெளிநாட்டுதவித் திட்டங்கள்தான் சுலபமான முறையாகுமென்றும் அவ்வறிக்கை கூறுகின்றது.

அமெரிக்காவின் மிகப் பெரிய சக்திகளில் தொழில்வளம் என்பதும் ஒன்றாகும் எனினும், சுதந்திர நாடுகளுக்கும் கம்யூனிஸ்டு நாடுகளுக்குமிடையே தொழில் சக்தியில் வேறுபாடு ஏற்படாமல் இருக்க மற்ற சுதந்தர நாடுகளின் தொழில் வளம் மிக முக்கியமானது என்று அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பாலைவனங்கள் பசுமையாகுமா?

"உலகின் மிகப் பெரிய பாலைவனப் பிரதேசமாகிய சஹாராவையும், இதர பாலைவனங்களையும் சோலைகளாக்குவது மிக மிக அவசியம் ; இந்த யோசனை நிறைவேற சர்வ தேச முயற்சியும் உதவியும் தேவை ; இது குறித்து ஒரு சர்வதேச நிறுவனம் அமைத்தால் நலமாயிருக்கும் ; மத்திய கிழக்கு பிரதேசத்தில் இந்த பாலைவனங்கள் பரவுவதாயுள்ளன," என்று, லண்டனிலுள்ள லெபனான் தூதர் முறையிட்டுள்ளார்.

வண்ணை—தமிழ் இளைஞர் கழகம்

"கழக உறுப்பினரும், ஆதரவாளருமான கருணாநிதி என வழங்கும் வை. அண்ணாமலை அவர்கள் 23—5—55 திங்களன்று நெல்லையில் இயற்கையெய்தியதை முன்னிட்டு, கழகம் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது" என செயலாளர் அறிவிக்கிறார்.

பொதுக்கூட்டம்

கோட்டூர் மலையாண்டி பட்டணத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் 28—5—55 சனி மாலை 7 மணி அளவில், குமரன் கட்டத்தில் பொதுக் கூட்டம் இராசு தலைமையில் நடைபெற்றது. நாஞ்சில் கி. மனோகரன் வி. சண்முகநாதன், பல்லடம் பொன்னுசாமி ஆகியோர் தற்கால அரசியல் நிலைமையும், ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிப்பதை பற்றியும், கட்டாய இந்தியைக் கண்டித்தும் சொற்பொழிவாற்றினர்.

ஜெனரல் அண்டு இண்டஸ்ட்ரியல் தொழிலாளர் சங்கம்

23—5—55 திங்கள் மாலை 4 - மணிக்கு, கெ. 17 பேக்கர் தெரு ஜி. டி. சென்னையில் தோழர் கே. எஸ். ஷெட்டி அவர்கள், ஜெனரல் அண்டு இண்டஸ்ட்ரியல் தொழிலாளர் சங்கத்தின் கிளை ஆபீசை திறந்துவைத்தார். அவர் பேசும் பொழுது சென்னையிலுள்ள ஓட்டல் தொழிலாளர் எல்லோரும், இதில் சேர்ந்து, சங்கத்தை பலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். எ. வி. குமார், வி. ஜி. ராமசாமி ஆகியோரும் பேசினர்.

புனல்வாழி மறுமலர்ச்சி மன்றம்

27—5—55 மாலை 4 மணிக்கு, மேற்படி மன்ற ஆண்டு விழா தோழர் சண்முகம் தலைமையில் நடைபெற்றபோது, மன்ற நோக்கம் பற்றி தோழர்கள் அரங்கராசன், இராமமூர்த்தி, முத்துப்பேட்டை தருமலிங்கம் ஆகியோர் பேசியபின், தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் 'மறுமலர்ச்சி' பற்றி சொற்பொழிவாற்றினார். சி வீரையன் நன்றிகூல விழா இனிது முடிந்தது.

புதுடில்லி, மே 30—

1954-ல் இந்தியாவிலிருந்து, மொத்தம் 20,21,956 டன் நிலக்கரி ஏற்றுமதி செய்யப்பட்டது,

நகரசபைத் தலைவர்களின் கை வலுப்பெறுகிறது!

அதிகாரங்களை விரிவாக்க சர்க்கார் உத்தரவு

குப்பகோணம், ஜூன் 1—

நகரசபை தலைவர்களுக்கு உடனடியாக அதிகாரங்களை அதிகரிக்கும் சர்க்கார் உத்தரவு ஒன்று வெளிவந்துள்ளது.

இந்த உத்தரவு, நகரசபை அதிகாரிகள் மீதுள்ள அதிகாரம் பற்றி தலைவருக்கும், நகரசபை நிர்வாக அதிகாரிகளுக்கும், உள்ள உறவைப்பற்றிய பழைய உத்தரவினை மாற்றியமைக்கிறது.

நகரசபையின் சுகாதார, எஞ்ஜினீயரிங், மின்சார, ரெவினியூ அதிகாரிகள் மற்றும் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் முதலியோரிடம், நேரிடையாக தகவல்களைப் பெறுவதற்கு நகரசபைத் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இப்போது நகரசபை நிர்வாக அதிகாரியின் மூலமே அத்தகவல்களைக் கோர முடியும்.

தலைவர், கோரிப் பெறும் தகவல்களின் நகல்களை, நகர சபை நிர்வாக அதிகாரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

நகர சபை நிர்வாக அதிகாரிகள் விடுமுறை, வேண்டுமென்றாலும், வெளியூர் செல்ல வேண்டுமென்றாலும், தலைவரின் முன் அனுமதி பெற்றாக வேண்டும்.

நிர்வாக அதிகாரிகளின் வேலையைப் பற்றிய ரகசிய அறிக்கைகள் சம்பந்தமாக, நகர சபைத் தலைவர்கள் குறிப்பெழுதி வைக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

நகர சபைத் தலைவர்களுக்கும், நகர சபைகளுக்கும் மேலும் அதிகாரங்களை வழங்குகிற மசோதா ஒன்று விரைவில் கொண்டுவரப்படும் என்றும் சர்க்காரின் புதிய உத்தரவு கூறுகிறது.

எல்லா நிலங்களுக்கும் உபரி வரி

மசோதா வருமாம்

சென்னை, ஜூன் 1—

உள்ளூர் நிர்வாக அமைப்புகளின் நிதி நிலையை உயர்த்திக் கொடுக்க, எல்லா நிலங்களுக்கும் ரூபாய்க்கு 2 அணா கிஸ்தியை உயர்த்தும் மசோதா ஒன்றினை, வரும் ஜூலையில் சென்னை சட்டசபை கூடும்போது சர்க்கார் கொண்டுவரும் என்று தெரிய வருகிறது.

இந்த வரி மூலம் சுமார் ரூ. 75-லட்சம் வசூலாகுமென்றும், இதில் 25 லட்சம் ரூபாய் பஞ்சாயத்துக்களுக்கு ஒதுக்கப்படலாமெனவும் தெரிய வருகிறது.

மின்சார திட்டங்கள்

ரூ. 75 கோடிக்கு சென்னை தயாரித்துள்ளது

சென்னை, ஜூன் 1—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதற்காக சென்னை சர்க்கார் ரூ. 75 கோடி செலவில் மின்சாரத் திட்டங்களை தீட்டியிருக்கிறது என்று தெரிகிறது.

குண்டா திட்டம், பெரிய திட்டங்களில் முக்கியமானது என்றும் மேட்டூர், பைக்காரா, மோயார், பாபநாசம், சென்னை மின்சார நிலையங்களின் உற்பத்தி அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளனவாம்.

புதுவை தேர்தல்

காங்கிரஸ் குழு நியமிக்கிறது

புதுவை, ஜூன் 1—

புதுவை பொதுத் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் தேர்தலை நடத்தவும், அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்கவும், ஐந்துபேரடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாயும்; இந்தத் தேர்தல் குழுவின் அங்கத்தினர் பட்டியல் அகில இந்திய காங்கிரஸ் குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதாயும் முதன் மந்திரி காமராசர் தெரிவித்திருக்கிறார்.

தோழர் அனீபா

சென்னை, ஜூன் 2—

தோழர் நாகூர் - அனீபா அவர்கள் கடந்த இரண்டரை மாதகாலமாக இலங்கையில் தங்கி, பல இசை அரங்குகளில் பங்கு பெற்றுவிட்டு, 29—5—55 அன்று விமான மூலம் தனது இசை குழுவினருடன் சென்னை திரும்பியுள்ளார். (ந. த. நி.)

நிலச் சீர்திருத்தம்: திட்டக்குழு பரிசீலனை

புதுடில்லி, ஜூன், 1—

திட்டக் குழு நியமித்த நிலச் சீர்திருத்தக் குழு, இத்திங்கள் 4-ந் தேதி கூடும்போது, சாகுபடி உரிமை முதலியவை பற்றி முதல் 5 வருடத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து பரிசீலனை செய்யும் என்று தெரியவருகிறது.

கூட்டுறவு விவசாயப் பண்ணைகள், வாரம், துண்டு நிலங்களை ஒன்று சேர்த்தல் முதலியவற்றில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் குறித்தும் பரிசீலனை நடைபெறுமாம்.

★

பொருளாதார நிபுணர் கூடுவர்!

திட்டக் குழு நியமித்துள்ள பொருளாதார நிபுணர் குழுக் கூட்டம் இத்திங்கள் 3-ந் தேதி நடைபெறும் என்றும் அப்போது 2-ம் ஐந்தாண்டுத் திட்டம் வகுப்பது பற்றியும் விவாதம் நடைபெறும் என்றும் தெரியவருகிறது.

நாடு கடத்தப்பட்ட டுனீசிய தலைவர்

தாயகம் திரும்புகிறார்

டுனீஸ், ஜூன் 1—

டுனீசியாவின் தேசிய இயக்கமான நியூதஸ்தூர் கட்சியின் தலைவரான ஹபீப் பூர்கைபா என்பவர்—கடந்த மூன்று வருட காலமாக பிரெஞ்சு சர்க்காரால் நாடு கடத்தப்பட்டிருந்தவர்—இன்று தனது தாயகம் திரும்பியுள்ளார்.

லட்சோப லட்சம் டுனீசியர்கள் துறைமுகத்தில் கூடி நின்று தங்கள் தலைவருக்கு, மகத்தானதோர் வரவேற்பளித்தனர்.

டுனீசிய சர்க்கார் அதிகாரிகளும், நியூதஸ்தூர் கட்சித் தலைவர்களும் கூடிநின்று தலைவரை வரவேற்றிருக்கின்றனர்.

தனக்களிப்பட்ட வரவேற்புக்கு ஹபீப் பூர்கைபா பதிலளிக்கையில், டுனிசியாவிற்கு சுயாட்சி வழங்கும் டுனிசிய-பிரெஞ்சு ஒப்பந்தங்களை தான் அங்கீகரித்துள்ளதாகவும் டுனிசியா பூரண விடுதலை பெறுவதற்கான முதல்படி இதுவென்றும் கூறியிருக்கிறார். சுயஆட்சிபெறுவதற்காக டுனிசிய மக்கள் சில அம்சங்களில் விட்டுக்கொடுக்க வேண்டி வந்தது என்றும், புது தேசிய வாழ்வுக்குத் தயாராகும் பொருட்டு, இந்தச் சலுகைகள் தரப்பட வேண்டியது அவசியமாயிற்று என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'மற்றவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டாத மனிதரே இல்லை!'

'ஆற்றலை பயன்படுத்தும் முறையே முக்கியமானது'

கழகக் கூட்டங்கள்

★

தருமாபுரம்

3—6—55 மாலை, தோழர் ஆசிர்வாதம் தலைமையில் நடைபெறும். தோழர் ஆ. மணிஎழிலன் பேசுவார்.

★

வடகடப்பந்தாங்கல்

4—6—55 மாலை, தோழர் சுந்தரம் தலைமையில் நடைபெறும் தோழர் ஆ. மணிஎழிலன் பேசுவார்.

சிறப்புச் சொற்பொழிவு

5—6—55 காலை 10 மணிக்கு, மதுரை, செல்லம் தியேட்டரில் (ஜோதி சினிமா), தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டு நிதிக்காக நடைபெறும். தோழர் க. அன்பழகன் சொற்பொழிவாற்றுவார். நன்கொடை: அணா 8, 4.

பொதுக் கூட்டம்

4—6—55 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு; இராமநாதபுரம் அழகிரி படிப்பக 3-வது ஆண்டு விழா, மேற்படி படிப்பகத்தின் முன்பு நடைபெறும். தோழர் க. அன்பழகன் சொற்பொழிவாற்றுவார்.

திருவள்ளுவர் விழா

4—6—55 பிற்பகல் 2-30 மணிக்குமேல், சென்னை, முத்துகிருஷ்ணன் தெரு 15-ம் எண்ணுள்ள இல்லத்தில், தாய்மார் கழகச் சார்பில் கீழ்க்கண்டவாறு வள்ளுவர் விழா கொண்டாடப் பெறும்:—

பிற்பகல் 2-30 மணி: 'கல்வி' என்ற பொருள் பற்றி, திரு மயிலை சிவமுத்து சொற்பொழிவு.

மாலை 4 மணி: சண்முகானந்தா கைத்தொழில் சங்கீத கலாசாலைக் குழந்தைகளின் ஆடல் பாடல்.

மாலை 5 மணி: கழகத்தினர் மயிலைக்குச் சென்று வள்ளுவரை வழிபடுதல்.

அச்சிறுப்பாக்கம் மாணவர் விடுதி மாணவர் சேர்தல்

கிராமங்களில் ஆரம்பக் கல்வி கற்று, உயர்தரக் கல்வி கற்க விரும்பும் ஆதிதிராவிட வகுப்பு மாணவர்களும், பிற்பட்ட வகுப்பு மாணவர்களும் தங்கள் வயதையும், தேறிய வகுப்பையும் குறிப்பிட்டு, இரண்டணா தபால் தலையுடன், 'காரியதரிசி, மாணவர் விடுதி, அச்சிறுப்பாக்கம், மதுராந்தகம் தாலுக்கா' என்னும் முகவரிக்கு 10—6—55ந் தேதிக்குள் விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும். கமிட்டியின் பரிசீலனைக்குப் பின் முடிவை அறிவிக்கப்படும்.

கல்வியின் நோக்கம் குறித்து கல்வித்துறை இலாகா தலைவர் பேருரை

"சென்னைக்கும், ஆந்திர மாநிலத்திற்குமாகச்சேர்ந்து இம்மன்றம் கூட்டப்பட்டிருக்கிறது. நிர்வாக முறையில் வேறு வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும், நம்மை எதிர்நோக்கிக்கொண்டுள்ள பிரச்சினை ஒன்றேயாகும்.

"தமிழர்—ஆந்திரர் போரிட்டுக்கொள்ளாது தொழில் முறைகளாக ஒன்றுகூடி வாழ்வதற்கு, இம்மன்றம், இனி நடைபெற இருக்கும் மன்றம்—மாநாடு—மறுமலர்ச்சிப் பயிற்சிக்கூட்டம் ஆகியவற்றிற்கு வழிகாட்டியாக இருக்க நான் விழைகிறேன்.

"இருசாராரும் நான்கு கிழமைகளுக்கு இம்மன்றத்தில் இணைந்து பணி புரிவார்களானால், ஒன்றுகூடி வாழும் கலையை அவர்கள் நன்கு கற்றுக்கொள்வார்கள். இந்நாட்டின் எதிர்காலக் குடிமக்களாக ஆக இருக்கும் இளைஞர்களுக்குப் பெரும் அளவில் பயிற்சி தரப்பட வேண்டியதும், ஒரு குறிப்பிட்ட அளவிற்குத் தாங்களே கற்றுக்கொள்ள வேண்டியதுமாக உள்ளது, அவசியம் நேரும்பொழுது அடிப்படையில் மாறுபடுவதும், ஆனால், அதே நேரத்தில் மாறுபடுவதற்காகப் போரிட்டுக் கொள்ளாமல், மாறுபடுவதற்கு ஒப்பி நடப்பதுமான, அனைவருடனும் ஒன்றி வாழும் அருங்கலையேயாகும்.

"மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்வதற்கான அவசியமே இல்லாத உயர்நிலையில் எந்த மனிதனும் இல்லை."

"உயர்நிலைக் கல்வி குறித்து ஆராய்ந்தறிய இம்மன்றம் கூடியிருக்கிறது. அறிவு பெறுவதற்கோ அல்லது எவ்வளவு விரும்பக்கூடியதாக இருந்தபோதிலும் அவைகளைப் பெறுவதற்காக மட்டுமோ கல்வி இருக்கவில்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அறிவு கண்டிப்பாக ஒரு ஆற்றலேயாகும். அவர்கள் ஆற்றல் பெற்றிருப்பதுமட்டும் போதாது. அந்த ஆற்றலை எவ்வாறு பயன்படுத்துவது என்பதுதான் அதிகம் கருத்தக்கதாகும். மேலும் மேலும் நாம் கூடுதலாகப் பெறுகின்ற ஆற்றலை, அனைவரின் நன்மைக்காகவும் ஒழுங்காகப் பயன்படுத்தாது, பலரின் அழிவுக்குப் பயன்படுத்துவோமானால், அந்த ஆற்றல் நீடித்து நிலைக்காது என்பதை நாம் நன்கு உணர்ந்துகொள்ளவேண்டும்."

—என்று சென்னை கல்வித்துறை இலாகாத் தலைவர் திரு. என். டி. சுந்தரவடிவேலு, ஆந்திர—சென்னை மாநில பள்ளி தலைமையாசிரியர்கள் 'ஒரு பொருள் பலருரை' அரங்கம் ஒன்றை சென்னை கலைக் கல்லூரியில் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

முகம்மது அலி

சுயேட்சையாக போட்டியிடுவார்

பாக். அரசியல் நிர்ணய சபைத் தேர்தல்

கராச்சி, ஜூன் 1—

பாக் பிரதமர் முகம்மது அலி, நடைபெறவிருக்கும் அரசியல் நிர்ணய சபைத் தேர்தலில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிடுவார் என்று தெரிகிறது.

கிழக்கு வங்க முஸ்லீம் லீக் கட்சியினர், அவரைத் தங்கள் கட்சி அபேட்சகராக ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டதாகத் தெரிகிறது.

முஸ்லீம் லீக் அல்லாத இதர கட்சிகள் அனைத்தும் அவரை ஆதரிப்பதாகக் கூறியுள்ளனவாம்.

இலங்கையில் 1957-ல் பொதுத் தேர்தல்

குடிஉரிமை பெற்ற இந்தியருக்கு நான்கு இடங்கள்

கொழும்பு, ஜூன் 1—

இலங்கையில் அடுத்த பொதுத் தேர்தல் 1957-ம் ஆண்டு நடைபெறும்போது, மக்கள் சபைக்கு, இலங்கை குடிமக்களாகப் பதிவு பெற்ற இலங்கை இந்தியர், தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புவர் என்று பிரதமர் கொத்தலாவலை குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கைக் குடிகளாக பதிவு செய்யப்பட்ட இந்தியருக்கு தனி வாக்காளர் பட்டியல் இருக்குமென்றும், மக்கள் சபையில் அவர்களுக்கு 4 தனி இடங்கள் இருக்குமென்றும் அவர் கூறியதாகத் தெரிகிறது.

பிரயாணிகளை கவனிக்க 'கண்டக்டர்'கள்!

இரயில்வேயில் ஏற்பாடாம்

புதுடில்லி, ஜூன் 1—

இரயில் வண்டிகளில் ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்கு நடந்து செல்லத் தக்க வகையில் அமைந்த இரண்டு ஜனதா ரயில்கள் அடுத்த சில மாதங்களில் விடப்படலாம் என்றும் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளின் சௌகரியங்களைக் கவனித்துக்கொள்ள இந்த வண்டிகளில் 'கண்டக்டர்கள்' நியமிக்கப்படுவார்கள் என்றும் வானொலியில் பேசிய இரயில்வே மந்திரி லால் பகதூர் சாஸ்திரி கூறியிருக்கிறார்.

சர்க்காரை ஏமாற்றிய வியாபாரி

கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்

ஆமதாபாத், ஜூன் 1—

போலி 'பர்மிட்' தயாரித்து 1951-ல் கட்டுப்பாடு பிரதேசத்தில் அரிசி இறக்குமதி செய்ததாக, ரஷிக்லால் ஹீராலால் என்ற ஒரு வியாபாரிக்கு அகமதாபாத் நீதிபதி 3 மாதக் கடுங்காவல் தண்டனையும், ரூ 2000 அபராதமும் தவறினால் 6 மாதக் கடுங்காவல் தண்டனையும் விதித்திருக்கிறார் எனத் தகவல் கிடைத்துள்ளது.

அகாலிதளத்தவரின் உரிமைக் கிளர்ச்சி

எதிர் நடவடிக்கை எடுக்கப்போவதாக காங்கிரஸ்காரர் பூச்சாண்டி

அமிர்தசரஸ், ஜூன் 1—

பஞ்சாபில் அகாலிதளத்தவர் நடத்திவரும் மொழிவழி மாநில சுதந்திரக் கிளர்ச்சி, வரும் ஜூன் 26-ந் தேதிக்குள் நிற்காவிட்டால், சீக்கிய மதத்துடன் தொடர்பில்லாத காரியங்களுக்காக, சீக்கிய கோவில்களாகிய குருத்துவாரங்களை உபயோகிப்பதைத் தடுக்க, எதிர்க் கிளர்ச்சி நடத்தப்போவதாக மக்கள் சபை அங்கத்தினரும், காங்கிரஸ்காரருமான சர்தார் தரிசன சிங் என்பவர் எச்சரிக்கை விடுத்துள்ளாராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.